**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI**

**O.S. No.145 /2020**

**Date: 17.03.2025**
**வா.சா. 1 கௌதமி த/பெ. அண்ணாமலை, க/பெ. வெங்கடேசன்**

5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

(1) என் தாத்தா பெயர் குப்புசாமி என்றால் சரிதான். என் தாத்தாவின் தந்தை பெயர் கிருஷ்ணன். என்னுடைய தாத்தாவின் பெயரிலும், அவர் அப்பா பெயரிலும் எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா சம்பாதித்த சொத்தை பாட்டியின் பெயரில் எழுதினார். என் பாட்டி லட்சுமி பெயரில் சொத்து எப்போது மாறியது என்று எனக்கு தெரியாது. என் பாட்டி பெயரில் உள்ள சொத்து அவருடைய சுயாஜ்ஜிய சொத்து என்றும், என் தாத்தா பெயரில் இருந்ததை அவர் பாட்டி பெயருக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவை நான் பார்க்கவில்லை. என் தாத்தா 2006 ல் இறந்தார். என் தாத்தா தன் மனைவி பெயரில் சொத்து வாங்கியதாக எனக்கு எப்படி தெரியும் என்று கேட்டால் என் அப்பா சொல்லி தெரியும். என் பாட்டி தன் சொத்தை என் அப்பாவிற்கு தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதினார் என்றால் என் தாத்தா என் பாட்டிக்கு கொடுத்த சொத்தை என் அப்பாவிற்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்தார். தாவா சொத்து என் பாட்டியின் சுய சொத்து என்றால் சரியல்ல. என் அப்பா இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. தாமரை, முத்தம்மாள் ஆகியோரிடம் என் அப்பா 18.09.2006 அன்று சொத்துக்கள் வாங்கினார் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் அதை வாங்கினோம். என் அப்பா 29.06.1992 அன்று ஒரு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. தாவாவில் கண்டுள்ள அனைத்து சொத்துக்களும் என் அப்பாவிற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

(2) என் அப்பா எங்களின் நலனுக்கு விரோதமாக நடக்கவேண்டிய அவசியம் இல்லையென்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கவிதா என்னுடைய சகோதரி. அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. கவிதா 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். 4ம் பிரதிவாதி கௌசல்யாவிற்கு என் அப்பா தான் திருமணம் செய்து வைத்தார். என் அப்பா என் திருமணத்தை அவர் கூடவே இருந்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அவர் மகள்கள் திருமணத்தை அவர் தான் நடத்தி வைத்தார். தாவா சொத்துக்கள் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் நான் அதில் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அவருக்கு தனிப்பட்ட சொத்து என்று எதுவும் கிடையாது. என் தந்தை கிரையம் செய்ததை பற்றி நான் எந்த கேள்வியும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் அப்பாவின் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லையென்றால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்து என்ற வகையில் எனக்கும் உரிமையுள்ளது. எனக்கு இந்த வழக்கில் எந்தவிதமான பாத்தியமும் இல்லையென்றும் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

<u>7ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

(1) 1ம் பிரதிவாதி என் தந்தை. 3ம் பிரதிவாதி என் சகோதரர். 2 மற்றும் 4 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரிகள். தாவா 1 முதல் 4 இன சொத்துக்கள் என் பாட்டியின் சொந்த சொத்து என்றால் சரியல்ல. என் தாத்தா என் பாட்டி பெயரில் கிரையம் பெற்ற சொத்தாகும். தாவா 1 முதல் 4 இன சொத்துக்களை என் பாட்டி 25.01.2006ம் தேதியிட்ட தானபத்திரம் மூலம் என் தகப்பானாருக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த தானப்பத்திரத்தில் என் பாட்டி "நான் சம்பாதித்த சொத்து " என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அந்த சொத்துக்களை என் தகப்பனார் மட்டும் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து அனுபவித்து வந்தோம். மேற்படி தானபத்திரத்தின் மூலம் என் தகப்பனாருக்கு கிடைத்த சொத்துக்கள் அனைத்தும் அவரின் தனிப்பட்ட சொத்துக்கள்

என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களுக்கான பட்டா என் தந்தையின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் விஜயகுமார் தாவா 20 – 23 அயிட்ட சொத்துக்களையும், 23 வது அயிட்டத்தில் உள்ள கிணற்றையும் 14.07.2008 தேதியில் அசுபதி நாயக்கர் மற்றும் இருவரிமிருந்து ரூ. 1,11,000/–த்திற்கு கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் சேர்ந்து உழைத்து சேர்த்து வைத்த பணத்தை கொண்டு என் அண்ணன் பெயரில் வாங்கினோம். எனது பங்களிப்பாக நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை.

(2) என் அண்ணன் விஜயகுமார் கிரையம் பெற்ற சொத்துக்களில் என் தந்தைக்கோ, எனக்கோ, என் குடும்ப உறுப்பினர்களுக்கோ எந்த உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. தற்போது எனக்கு 32 வயதாகிறது. விஜயகுமார் கிரையம் வாங்கி சுமார் 17 வருடமாகிறது. நான் எந்த நிலத்தில் உழைத்தேன் என்றால் என் தந்தையின் நிலத்திலும், என் தாத்தாவின் நிலத்திலும் உழைத்தேன். என் அண்ணன் வாங்கிய சொத்துக்களுக்கான பட்டா அவர் பெயரில் உள்ளது. என் அண்ணன் வாங்கிய தாவா 20 – 23 இன சொத்துக்களை அவர் 7 ம் பிரதிவாதிக்கு 02.11.2016 அன்று கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அந்த பத்திரத்தின் நகல் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. என் அப்பா பெயர் கு. அண்ணாமலை. 7 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணமாக வா.சா.ஆ.11 ல் என் தந்தை அண்ணாமலை சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. கிரையம் பெற்றது முதல் 7 ம் பிரதிவாதி தான் மேற்படி சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 8 மற்றும் 9 யை தெரியும். அவர்கள் எங்கள் பங்காளிகள். அவர்களுக்கு என் அண்ணன் அடமானம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அந்த பத்திரத்தின் நகல் எனது தரப்பு ஆவணம் வா.சா.ஆ.13 மற்றும் 14 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. என் அண்ணன் வாங்கிய சொத்துக்களில் என் தந்தைக்கோ, எனக்கோ, எந்தவித உரிமையும் இல்லையென்றும், அவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அதை மறுக்கிறேன். தவறான அடிப்படையில் நான் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** –

(1) 6 ம் பிரதிவாதி மாணிக்கம் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்துக்கள் சம்மந்தமாக தாவாவில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. 6 ம் பிரதிவாதி எந்த சொத்தையும் கிரையம் பெறவில்லை என்றும், அவரை அலைக்கழிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதியை பொறுத்தவரையில் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

**1 – 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(1) 1 ம் பிரதிவாதி அண்ணாமலை என் அப்பா. 2, 4 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரிகள். 3 ம் பிரதிவாதி விஜயகுமார் எனது அண்ணன். தாவா சொத்துக்கள் பூர்வீகமாக என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் விவசாயம் செய்து அதிலிருந்து வந்த வருமானத்தில் தான் இதர சொத்துக்களை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் என் அப்பாவும், என் அண்ணனும் ஆண் வாரிசுகள் என்பதால் தான் அவர்கள் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நானும், 1– 4 பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு பாகம் உள்ளது போலவே 1– 4 பிரதிவாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். 1 – 4 பிரதிவாதிகளுக்கு எனக்கு சமமாக பாகம் பிரித்துக்கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**